



தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் கழகத் தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (22-12-2024) காலை சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் முனைவர் க. பொன்முடி, ஆ.ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி. அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்பு செயலாளர்கள் ஆஸ்டின், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.12.2024) முகாம் அலுவலகத்தில், எழுத்தாளர் ஆ.இரா.வேங்கடாசலபதி தான் எழுதிய “திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908” என்ற நூலுக்கு சாகித்ய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டதற்காக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம், ஃபெஞ்சல் புயல் நிவாரண நிதியாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், நேற்று வழங்கினார்.

### தே.மதியழகன் - ஒய்.பிரகாஷ் பங்கேற்பு! கிருஷ்ணகிரி நகர தி.மு.க. சார்பில்

# துணை முதல்வர் பிறந்த நாள் விழா: ஆயிரம் பேருக்கு நல உதவிகள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – அர.சக்கரபாணி வழங்கினர்!

கிருஷ்ணகிரி, டிச. 23-

கிருஷ்ணகிரி நகர திமுக சார்பாக கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே பேரறிஞர் அண்ணா சிலை அமைக்கப்பட்டு கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதியர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்த சிலையை தற்போது நகர திமுக சார்பாக நகர செயலாளர் எஸ்.கே.நவாப் ஏற்பாட்டில் புனரமைக்கப் பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் , கிருஷ்ணகிரி நகர்மன்ற தலைவர் பரிதா நவாப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் எஸ்.கே.நவாப் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்.

கழக முதன்மைச் செயலாளரும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களும் கழக கொடி ஏற்றி, பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் , கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான சின்னவர் அவர்களது பிறந்தநாளையொட்டி 147 கிலோ கேக் வெட்டி நகர திமுக சார்பில் தையல் எந்திரம், சலவைப் பெட்டி உள்ளிட்ட 10 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டது.

அப்போது முரசொலி சந்தாவுக்கு கிருஷ்ணகிரி நகர கழக சார்பில் ஐந்து லட்ச ரூபாய் காசோலை வழங்கப் பட்டது.

கிருஷ்ணகிரி 7வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் ஆயிஷா முகமது ஜான் தலைமையில் மாற்றுக் கட்சியிலிருந்து 300 பேர் விலகி அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ் ,

மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி சுகவனம், மாநில தீர்மான குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவை தலைவர் நாகராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன், அரியப்பன் மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி , சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில் , கிருபாகரன் , பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம்,பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன் , தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர் , நரசிம்மன் , குண.வசந்தரசு, எக்கூர் செல்வம் , ரஜினி செல்வம், குமரேசன்,

பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன் ,சாஜித், மற்றும் கே.வி.எஸ் சீனிவாசன், பி.டி அன்பரசன், அமீர்சுகேல், கனல்.சுப்பிரமணி, மாதவன், அரங்கன்னல், பொன். குணசேகரன், மீனா நடராஜன், ஜான் டேவிட் ராஜ், ஜாபர், முகமது ஜான் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் , தலைவர்கள் , துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு கழகச் செயலாளர்கள் வட்ட பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### மாவட்ட அமைப்பாளர் ராஜ் (எ) கருணாநிதி வரவேற்புரையில்

# மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை ஒன்றிய - நகர - பேரூர் அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக் கூட்டம்!

## திருவாரூரில் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர், டிச. 23 -

திருவாரூர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்காக, தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் புதிய அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களின் அறிமுக ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் சேகர் (எ) கலியபெருமாள், ஒன்றியக் குழுத் தலைவர் புலிவலம் ஏ.தேவா, திருவாரூர் நகரக் கழகச் செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் திருவாரூர் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ராஜ் (எ) கருணாநிதி வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட தலைவர் ராசு. இளங்கோவன், துணைத் தலைவர் ராம கலைச்செல்வன், துணை அமைப்பாளர்கள் பார்த்தசாரதி, முருகானந்தம், பாலாஜி, ஜெயபால் உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினர்.

மாவட்ட ஊராட்சி துணை தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா, நகர செயலாளர் வாரை எஸ். பிரகாஷ் ஆகியோர் சார்பு அணிகளின் முக்கியத்துவங்களையும் கழக பணிகளையும் எடுத்துக்கூறினர்.

மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. கழகத்தின் செயல்பாடுகள் குறித்தும், பொது மக்களிடம் கழகத்தின் சாதனைகளை எப்படி எடுத்து செல்வது என்பது குறித்தும், சார்பு அணிகளின் பணிகள் தேர்தலுக்கு எவ்வாறெல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதையும் தெளிவாக புதிய உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறினார்.

கூட்டத்தில் தங்களை பொறுப்பாளர்களாக நியமித்த கழக தலைவர்,மாநில நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களுக்கு நன்றி தெரிவித்தல், தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்கள் வழிகாட்டுதலின்படி 2026ல் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் கழக மற்றும் அதன் கூட்டணி வெற்றி பெறுவதற்கான பணிகளை திருவாரூர் மாவட்ட கழகத்துடன் இணைந்து பணியாற்றுவது, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் சார்பில் ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று கலை நிகழ்ச்சிகள் மூலம் கழக சாதனைகளை கண்ணியமான முறையில் எடுத்துரைப்பது, தலைமை கழகத்தால் நடத்தப்பட இருக்கின்ற இலக்கியப் போட்டிகளில் திருவாரூர் மாவட்டத்திலிருந்து பங்கேற்கும் மாணவ மாணவிகள் வாழ்த்து தெரிவித்தல், அடுத்த மாதம் திருவாரூர் காட்டூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெறவிருக்கும் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவில் பெருந்திரளானோர் பங்கேற்பது , ஒன்றிய பாஜக அரசின் உள்துறை அமைச்சர் அமீத் ஷாவின் அம்பேத்கர் குறித்த சர்ச்சை பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கும் இந்தியா கூட்டணியின் தீர்மானத்தை வழிமொழிவது உள்ளிட்ட தீர்மானமங்கள் நிறை வேற்றப்பட்டன. இறுதியில் நகர அமைப்பாளர் சக்திவேல் நன்றி கூறினார்.

# ஆண்டிமடம் தெற்கில் தெருமுனைக் கூட்டம்!

அரியலூர்,டிச, 23-

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் மாவட்ட செயளாலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி வடுகர்பாளையம் கிராமத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.கலியபெருமாள் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் கிளை செயலாளர் இராஜேந்திரன் வரவேற்றார்.

கா.பாலு, இ.பி.ஆர். செந்தில்குமார், அன்பழகி முத்துக்குமரன், கிரேஸ் சுப்பிரமணியன், சஞ்சீவிகுமார், பெ.தனசேகரன் சிவமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர், சிவதுத்துவளவன், கழக இளம் பேச்சாளர் மில்லர் மாண்டேலா, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் பங்கேற்று, விடியல் மகளிர் பேருந்து பயணம்,நான் முதல்வன், தமிழ்புதல்வர், மகளிர் உரிமைத் தொகை,காலை உணவு திட்டம், மக்களை தேடி மருத்துவம், உள்ளிட்ட திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் க.தர்மதுரை,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் டேவிட், கழக வழக்கறிஞர் செல்ல.மணிமாறன், சி. ராணி, பால்.அருள்தாஸ், பாலமுருகன், இளவரசன், கா.அறிவழகன், சா. சேகர்,

ஜே. ராமலிங்கம், பிரபு,பாக்கியராஜ் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர். இறுதியாக பாகமுகவர் வீரபாபு நன்றி கூறினார்.

### ஈரோடு தொகுதி கழக நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷின்

# தொகுதி மேம்பாட்டு நிதி - ரூ.4 கோடியே 91 லட்சத்தில் 58 பணிகள்!

## பிரதமர் நிவாரண நிதியில் - 40 நபர்களுக்கு - ரூ.63 லட்சம் பெற்று வழங்கி உதவியுள்ளார்!

ஈரோடு, டிச.23-

ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி, ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிகளும், திருப்பூர் மாவட்டத்தில் தாராபுரம், காங்கேயம் சட்டமன்ற தொகுதிகளும், நாமக்கல் மாவட்டத்தில் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியும் உள்ளன.

இத்தொகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் கழகத்தோழர்களின் பரிந்துரையின் பேரில் ஈரோடு தொகுதியின் கழக நாடாளுமன்ற உறுப்பினரான கே.இ. பிரகாஷ், ஈரோடு நாடாளுமன்ற தொகுதி உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 58 பணிகளுக்கு ரூ.4,90,84,600 ஒதுக்கீடு செய்து பணிகளை நிறைவேற்றி யுள்ளார்.

மேலும் பிரதம மந்திரி தேசிய நிவாரண நிதி திட்டத்தின் கீழ் 40 நபர்களுக்கு ரூ.62,77,500-ம் ஆக மொத்தத் தொகை ரூ.5,53,62,100 பயனாளிகளுக்கு வழங்கி உதவியுள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; கடந்த ஜூன் 1 முதல் நிரப்பப் படாமல் இருந்துவரும் தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவர் பதவிக்கு, இந்திய உச்சநீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அவர்களின் பெயர் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறதாமே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; கடந்த ‘விநாயக சதுர்த்தி’ முதலே உள்ளே இருந்த பூனைக்குட்டி இப்போது வெளியே வந்து கொண்டிருக்கிறது !**



தமிழ்நாடு துணை முதலமைச்சர் – திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47 வது பிறந்த நாளை விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டம் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.மேலும் இதன் ஒரு பகுதியாக திருச்சி தெற்கு மாவட்டம் , திருவெறும்பூர் பகுதி கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது, இந்த பொதுக்கூட்டத்திற்கு திருவெறும்பூர் பகுதி கழகச் செயலாளர் சிவக்குமார் தலைமை வகித்தார். மேலும் இந்த பொதுக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாநகர செயலாளர் மதிவாணன் மற்றும் திமுக மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி , தலைமை கழக பேச்சாளர் காசிநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.




அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம் சார்பில் மாவட்ட கழக செயலாளர் – போக்குவரத்துதுறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி வடுகர்பாளையம் கிராமத்தில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் ஒன்றிய செயலாளர் ஆர்.கலியபெருமாள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர், சிவமுத்துவளவன், கழக இளம் பேச்சாளர் மில்லர் மண்டேலா,சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.